[9th November 1966

தீப்பெட்டி தொழிற்சாலைகள்

*541 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராஜ்யத்தில் உள்ள தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மூலதனக் கடன்கள் தனித் தனியே எவ்வளவு?

(இ) மூலதனக் கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டியைக் குறைக்குமாறு அந்த சொசைட்டிகளிலிருந்து முறையீடுகள் வந்துள்ளனவா?

(உ) அவைகளின் மீது எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) A statement [a] is placed on the Table of the House.

(b) & (c) No representation for reducing the rate of interest on the loans has been received. However, the Government have permitted postponement of repayment of certain instalment of loans by certain societies. For the period of postponement of instalment, simple interest has been ordered to be charged. The request of certain societies for waiver of this simple interest was turned down.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ராஜ்யத்தில் சில பகுதிகளில் நான் அறிந்த மட்டில் திருச்செந்தூர், குலசேகரப்பட்டினம் போன்ற பகுதிகளில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் முறையாக நடைபெறவில்லை. அந்த சொஸைடிகள் பெரும்பாலும் லாபத்தில் வேலை செய்யவில்லை. அதற்குரிய காரணத்தை அரசாங்கம் ஆராய்ந்திருக்கிறதா? இப்பொழுது கோரப்படும் சலுகை இந்த சொசைடிகள் முறையாக வேலை செய்வதற்கு உள்ள அம்சங்களில் ஒன்று அல்லவா? ஆகவே, அவை முறையாக இயங்குவதற்கு வேறு என்னென்ன விதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது எகனமிக் ஸ்கீம் அல்ல. இது ஒரு வெல்பேர் ஸ்கீம். எந்தெந்த இடங்களில் பிற்பட்ட பகுதிகளில் தொழில் வாய்ப்பு இல்லை என்று நாம் கருதுகிறோமோ அந்தப் பகுதிகளில் பார்த்து தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைப்பதனால் சிலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற முறையில் இந்தத் தொழிற்சாலைகள் வைக்கப்பட்டுள்ளன. நஷ்டம் என்று சொல்லமுடியாது. லாபம் இல்லாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம் பெரிய பாக்டரிகளிடமிருந்து போட்டி ஏற்படுவது தான்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: அவைகளுக்குரிய எக்ஸைஸ் தீர்வை சம்பந்தமாக இப்பொழுது 'ஸி' பிரிவை 'டி' பிரிவாக, அல்லது 'பி' பிரிவை 'ஸி' பிரிவாக மாற்றி அமைப்பதன் மூலம் அவைகளை முறையாக இயங்க வைக்க முடியும் என்ற முறையீடு

---

[a] Printed as Appendix IV on pages 894–896.

9th November 1966]

அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து என்ன முடிவு செய்திருக்கிறது, என்ன ஏற்பாடுகள் செய்யும் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வரி விலக்கு எந்த அளவுக்குக் கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு இந்த சொஸைடிகளின் வருமானம் அதிகரிக்கும். அம்மாதிரி வரி விலக்கு கொடுக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக, சற்றேறக்குறைய 10 ஆண்டுகளாக மத்திய சர்க்காரிடம் நாம் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். சில சலுகைகள் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். 'ஸி' பிரிவிலே இருக்கக்கூடிய சில சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்தச் சலுகைகள் போதாமல் இருக்கின்றன. ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் அதைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லிக்கொண்டுதான் வருகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நம்முடைய ராஜ்ய அரசாங்கம் கோருகிற அளவுக்கு மத்திய அரசாங்கம் இந்தச் சலுகைகளை வழங்குகின்ற வரையிலாயினும், இதுபோன்று வட்டியை வெய்வ் செய்வதற்கு தற்காலிகமாகவாவது ஏற்பாடு செய்வது பற்றி அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்காகத்தான் நாம் கையினால் செய்கிற தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரி கிடையாது என்ற பெரிய சலுகையை கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டு என்ன சலுகை கொடுப்பது என்று புரியவில்லை.

Dearness allowance

*542 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the orders revising the rates of D.A. issued in G.O. Ms. No. 590, Finance, dated 24th May 1966 have been extended to the teaching and non-teaching staff of polytechnics under private bodies ?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes.

திரு. செ. மாதவன் : அண்மையில் மத்திய சர்க்கார் பொதுவாக அகவிலைப்படியை ஏற்றுவதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, மாநில சர்க்காரும் அதுபோன்று அகவிலைப் படியை உயர்த்த முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பொதுவாக எல்லோருக்கும் பொருந்தும்படியான விஷயம். இப்பொழுது பாலிடெக்னிக்ஸ் பற்றித்தான் கேள்வி போடப்பட்டிருக்கிறது. அதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாதவர்களுக்கும், இதர அரசாங்க சிப்பந்திகளுக்கும், இப்பொழுது விலைவாசி விஷம் போல் உயர்ந்திருப்பதன் காரணமாக,